# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## நிலையறி பரீட்சை – 2021

**கிறிஸ்தவம்** **தரம் 9**

### பகுதிI

**மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக**

1. இறை உறவிலிருந்து பிரிக்கப்பட்ட மனிதன் மத்தியில் நேர்மையாளராகவும் இறைவனுடன் நெருங்கிய தொடர்புடையவராகவும் இருந்தவர்
   1. தாவீது 2. யாப்கோப்பு 3. நோவா 4. சவுல்

2. இன்றைய உலகின் போக்கு தீயதாக இருப்பினும் நாம் வாழவேண்டியது
   1. உலகப் போக்கின்படி 2. மனம் போனபோக்கில்
   3. நல்வாழ்வைத் தெரிவுசெய்து 4. நண்பர்கள் கூறுவதுபோல்

3. இறைவனின் பிள்ளைகளிடம் காணப்பட வேண்டிய நற்பண்புகள்
   1. கீழ்ப்படிவு,தாழ்மை, இறைவிசுவாசம் 2. அன்பு,போட்டி,சுயநலம்
   3. மன்னிப்பு,கோபம்,அன்பு 4. இரக்கம்,பேராசை,பணிவு

4. இஸ்ரேல் மக்களின் முதல் அரசன்
   1. தாவீது 2. சவுல் 3. பாரவோன் 4. யோனத்தன்

5. 'நீ என்னிலும் நீதிமான்' எனக்கூறி தாவீதின் நேர்மைத் தன்மையை ஏற்றுக்கொண்டவர்
   1.சாலமோன் 2. மெதிபொப்பேத் 3. சவுல் 4. யோனத்தன்

6. யூதப் பிள்ளைகளின் மிகப்பழக்கப்பட்ட விழித்தல்
   1. என் கடவுளே! 2. அப்பாதந்தையே!
   3. எங்கள் தந்தையே! 4. பரலோக தந்தையே

7. முழந்தாளில் நின்று முழுமனதுடன் விண்ணப்பம் செய்வதில் வெளிப்படுவது
   1. இறைவனுக்குப் பணிதல் 2. இறைவனுக்கு முழுமையாக கீழ்ப்படிகின்றோம்
   3. இறையன்புடன் வாழ்தல் 4. விசுவாசத்தை வெளிப்படுத்தல்

8. யூதர்கள் திருமணவிழாவை எத்தனை நாட்கள் கொண்டாடுவர்
   1. ஐந்து நாட்கள் 2. மூன்று நாட்கள்
   3. இரண்டு நாட்கள் 4. ஏழு நாட்கள்

9. தாகத்தினால் போஷிக்கப்பட்ட இறைவாக்கினர்
   1. எலிசா 2. நீக்கா 3. ஏலியா 4. ஏசாயா

10. மூன்று நாட்களாக இயேசுவின் போதனையைக் கேட்டுக்கொண்டிருந்த மக்களின் பசியைப் போக்கியது
    1. 7 அப்பமும் 2 மீனும் 2. 6 அப்பமும் 2 மீனும்
    3. 10 அப்பமும் 2 மீனும் 4. 9 அப்பமும் 2 மீனும்

kalvi.lk

11. இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்த பின்பு செய்த அருள் அடையாளம்
    1. தொழுநோயாளர் குணம்பெறுதல்
    2. தண்ணீரை இரசமாக்குதல்
    3. கை சூம்பியவனைக் குணமாக்குதல்
    4. அரசஅலுவலர் மகன் குணம் பெறுதல்

12. ஓய்வு நாளில் இறைசித்தம் எதுவென இயேசு எடுத்துக்காட்டுகின்றார்
    1. நற்செயல் புரிதல் 2. செபித்தல்
    3. சட்டத்தைக் கடைப்பிடித்தல் 4. கூடி உணவருந்துதல்

13. தூய ஆவியைப் பெற்றபின் திருத்தூதர் செய்த முதலாவது அற்புதம்
    1. கை சூம்பியவனைக் குணமாக்கியது
    2. பேய் பிடித்தவனைக் குணமாக்கியது
    3. பிறவியிலேயேகால் ஊனமுற்றவரைக் குணமாக்கியது
    4. தொழுநோயாளரைக் குணமாக்கியது

14. 'உலகின் கடைசி எல்லைவரை எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்' என்று இயேசு திருத்தூதர்களுக்கு கூறியது
    1. இறக்கும்போது 2. விண்ணேற்றம் அடையும்போது
    3. திருமுழுக்கின்போது 4.தோற்றம் மாறியபோது

15. 'தபீத்தா எழுந்திரு 'எனக் கூறி அவளை உயிர்பெறச் செய்தவர்
    1. யோவான் 2. பவுல் 3.பேதுரு 4. இயேசு

16. திருச்சபைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு கொலை செய்யப்பட்டவர்களை எவ்வாறு அழைத்தனர்
    1. திருத்தூதர்கள் 2. திருத்தொண்டர்கள்
    3. மறைசாட்சிகள் 4. கிறிஸ்தவர்கள்

17. சவால்களை நாம் வெற்றி கொண்டு விசுவாசத்தோடு இறைவனுக்கு சான்றுபகர எமக்குத் தேவையானது
    1. தூயஆவியின் வல்லமையும் பெலனும் 2. பணமும் பதவியும்
    3. ஆலயமும்,வழிபாடும் 4. பெற்றோரும்,நண்பரும்

18. ஊனியல்பின் செயல்களாவன
    1. அன்பு,மன்னிப்பு 2. குடிவெறி,காமவெறி
    3. பொறுமை,பொறாமை 4. செபம்,தபம்

19. ஊனியல்பின் செயல்கள் பற்றிக் குறிப்பிடும் வேதப் பகுதி
    1. எசாயா 2 2. யோவான் 1 3. கலாத்தியர் 5 4. லூக்கா 10

20. எமது வாழ்வை முன்னேற்றுவதற்கான ஒரு வழி
    1. இரவுபகலாக உழைத்தல் 2. எந்த வழியிலும் உழைத்தல்
    3. திட்டமிட்டு ஊக்கத்துடன் உழைத்தல் 4. மற்றவரின் உழைப்பில் வாழ்தல்

## பகுதி II

**விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

01.

1. மனிதன் இறையுறவிலிருந்து விடுபடுவதற்கு காரணமாக அமைவது என்ன?
2. நோவாவின் புதல்வர்களின் பெயர்களைத் தருக
3. இறைவனின் பிள்ளைகளாகிய எம்மிடத்தில் காணப்படவேண்டிய நற்பண்புகள் ஐந்து தருக

(3+4+=12)

02.

1. சவுலுக்குப் பின் இஸ்ரேலரின் அரசராக நியமிக்கப்பட்டவர் யார்?
2. தாவீதின் நேர்மை வெளிப்பட்ட சந்தர்ப்பங்கள் எவை?
3. தாவீதின் வாழ்வில் காணப்பட்ட நற்பண்புகள் போன்று எம்மிடம் எவ்வாறு நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளலாம்

(3+4+=12)

03

1. இயேசு எமக்கு அறிமுகம் செய்த விண்ணப்பம் எது?
2. இயேசு விண்ணப்பம் செய்த சந்தர்ப்பங்கள் நான்கு தருக
3. நாம் சோதனைகளிலிருந்து விலகி வாழ வரம் வேண்டி சிறு செபம் எழுதுக

(3+4+=12)

04.

1. திருத்தூதர்களுக்கு தூய ஆவியின் வல்லமை பொழியப்பட்ட தினம் எது?
2. தூய ஆவியின் வல்லமையைப் பெற்ற பின்பு திருத்தூதர் ஆற்றிய பணிகள் எவை
3. திருத்தூதரின் வாழ்வின் மூலம் எமது கிறிஸ்தவ வாழ்வக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் எவை?

(3+4+=12)

05.

1. திருச்சபை எப்போது ஆரம்பமாகியது?
2. உரோமையரின் ஆட்சியில் ஆதித் திருச்சபை அனுபவித்த துன்பங்கள் 4 தருக
3. ஸ்தேவானின் வாழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய மன்னிப்பு பற்றிய பாடங்கள் எவை

(3+4+5=12)

06.

1. ஊனியல்பின் செயல்கள் 5 தருக
2. மது அருந்தும் ஒருவரிடம் காணக்கூடியசுபாவங்கள் 4 தருக
3. குடிவெறியினால் ஏற்படும் தீயவிளைவுகள் பற்றிவிளக்குக

(3+4+5=12)

07.

1. ஆதித்திருச்சபைமுகம் கொடுத்த துன்பங்களில் மூன்றைக் குறிப்பிடுக
2. ஸ்தேவானிடம் காணப்பட்ட விசேடபண்புகள் நான்கு தருக.
3. தூயஆவியின் வல்லமையடைந்த ஸ்தேவானின் நடத்தை மூலமாக உமது வாழ்விற்குப் பெற்றுக் கொள்ளக்கூடிய வழிகாட்டல்கள் ஐந்து எழுதுக

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457